"கர்த்தர் நகரைக் கார்க்காவிட்டால்
அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

சத்தியவேத பாது.

# காவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G. P 'O. AS A NEWSPAPER.

89-ம் புத். / யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு வைகாசிமீ 30-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 || 21-ம் இல.

# 2-ம்வத்திக்கான் சங்கம்பற்றி
## கருதினல் சுயென்ஸ் அளித்தபேட்டி

- சங்க முடிவு
- புதுமுறைகள்
- குருமடப்பயிற்சி
- இல்லற தியாக்கோன்
- புதுமுறைக் கன்னிகாஸ்திரிமார்.

(பிரபல கருதினல்மார் ஒட்டாவியானி, பியா அவர்களின் பேட்டிகள் முன் சில வாரங்களில் காவலனில் வெளிவந்தன. கருதினல் சுயென்ஸ் புதுமுறைகளில் பெரும் பற்றுள்ளவர். ஐக்கிய அமெரிக்காவில், சிக்காக்கோ நகரத்தில் சென்றவாரம் இப்பேட்டியை அளித்தார்)

**கேள்வி: 1**

**2-ம் வத்திக்கான் சங்கத்தின் முடிவை இவ்வருடம் நாம் எதிர்பார்க்கலாமா?**

**பதில்:**

இவ்வருடகூட்டங்களுடன் 2-ம் வத்திக்கான்சங்கம் முடிவுபெறும் என நான் நினைக்கவில்லை. எடுத்துக்கொண்ட கருமங்களைமுடிப்பதற்கு அடுத்தவருடமும் கூடுவது அவசியமாக எனக்குத் தோன்றுகின்றது.

**கேள்வி: 2**

**புதுமுறைகளில் உமக்கு உள்ள பற்றுப் பெரிதென நாம் அறிவோம். வத்திக்கான் சங்க அலுவல்களில் புதுமுறைகள் புகுத்துவதுபற்றி யாது கூறுவீர்?**

**பதில்:**

ஆம். புதுமுறைகள் எனக்குப் பெரும் ஊக்கத்தை அளிக்கின்றன. ஆனல், சகலத்திலும் புதுமுறைகளைப் புகுத்திவிட முடியாது. பலபழைய முறைகளுக்குப் புதுமுறைகள் சமம் இல்லை. மேலும் தேவனுடைய போதனையில் பழைய கருமம், புதிய கருமம் என்ற பாகுபாடில்லை. எனினும் இப்போதனைகளைப் பரப்புவதில் நாம் சில பழைய முறைகளைக் கைவிட்டுப் புதிய முறைகளைக் கைக்கொள்வது நன்று. இதுவும் ஒரு நோக்கமாகவே வத்திக்கான் சங்கம் கூட்டப்பட்டதை யாவரும் அறிவர்.

**கேள்வி: 3**

**வத்திக்கான் சங்கம் ஏது கருமத்தில் புதுமுறைகளைப் புகுத்துவது மிக அவசியம் என நீர் கருதுகின்றீர்?**

**பதில்:**

பல கருமங்களில் புதுமுறைகள் புகுத்தப்படவேண்டுமெனினும் குருமாரின் பயிற்சிச்சாலைகளில் புதுமுறைகள் புகுத்தப்படவேண்டுமென்பதே மிக அவசியமாக எனக்குத் தோற்றுகின்றது. வேதப்பரப்புதலுக்குக் குருமார் இன்றியமையாதவர்கள். ஆனல், இன்றைய உலகநிலையில், பழைய முறைகளைக் கையாண்டு தேவனின் போதனைகளைப் பரப்பமுடியாது இருக்கின்ருேம். ஆகவே, மாறிய இந்நிலைக்குத் தக்க குருமார் பயிற்றப்பட வேண்டியது

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)




## இந்தியபிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு காலமானர்

இந்தியாவின் முடிசூடாமன்னரென்று அகிலமுழுவதிலுமே புகழ்ந்து கொண்டாடப்பெற்றுவந்தவரும், தலைசிறந்த அரசியல்வாதியும், உலகசமாதானத்துக்காக வருந்தியுழைத்த உலகப்பெரியார்களுள் ஒருவராய் விளங்கியவரும், எத்துணைபெரும் சிக்கல்கள் எழுந்தபோதிலும் மத்திய வழியைக் கடைப்பிடித்து மதியூகமாக ஆட்சிநடத்திவந்த பெரிய இராசதந்திரியும், இந்தியாவின் விடுதலைக்காக அருந்தியாகங்கள் செய்து, சிறைவாசந்தானும் செய்திருந்து இந்தியசரித்திரவரலாற்றிலேஇணையற்றபுகழ்ஈட்டிய இந்தியமகான்களில் ஒருவரும், பிரசித்திபெற்ற இந்தியபிரதமருமான பண்டித ஸ்ரீ ஜவஹர்லால் நேருஅவர்கள் எதிர்பாராதவிதமாய்ச் சென்றபுதன்கிழமை காலஞ்சென்ருரெனப் பரந்த துயரசெய்தியானது எவர்க்குமே பெரும்அதிர்ச்சியை உண்டுபண்ணலாயிற்று.

# இலங்கைக் கத்தோலிக்க சங்கத்தலைவர்
## (அட்வக்கேட் சி. ஈ. எஸ். பெரேரா)
## பத்திரிகை விசாரணைக் குழுவின்முன் கூறியது

● பள்ளிக்கூடங்களில் நடக்கும் காதற் கருமங்கள், ஒழுக்கயீனங்கள், வேலை நிறுத்தங்கள், கீழ்ப்படியாமை முதலியனவும்; சீர்கெட்ட காதல் வரலாறுகள், விபசாரம், விவாகரத்து, தற்கொலை முதலியனவும்; சினிமாப் படக்காட்சிகளின் அலங்கோலச் சித்திரங்கள், நடிகர் நடிகைகளின் தவருன வாழ்க்கை வரலாறுகள், கேடுகெட்ட கதைகள் முதலியனவும் பத்திரிகைகளில் வெளிவருவதுபற்றி இவ்விசாரணைக்குழுவின்முன் கூறப்பட்ட எதிர்ப்பை நாம் எமது முழுப் பலத்துடனும் ஆமோதிக்கின்ருேம்.

● பலதேசங்களில் கத்தோலிக்கரும் மறுசமயத்தவரும் சேர்ந்து பத்திரிகைகள், படக்காட்சிகள், புஸ்தகங்கள், சஞ்சிகைகள் ஒழுக்கத்தை வழுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

● இந்நாட்டில் கத்தோலிக்கர் சுயபாஷையின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்திருக்கின்றனர் என்ற [illegible]னும் உண்மையில்லை. சுயபாஷைகளில் பிள்ளைகள் கற்பிக்கப்படவேண்டும்என்று அரசாங்கத்தை இலங்கையில் முதன்முதல் வற்புறுத்தினவர் கத்தோலிக்க குரவர் வண. பொஞ்சின் சுவாமியாரே. இவர் பிரான்சுதேச குருவானவர். இதைவிட இந்நூற்ருண்டின் தொடக்கத்திலே சுயபாஷைகளின் வளர்ச்சிக்குக் கத்தோலிக்கர்கள் அளித்த ஆதரவை நிரூபிக்க அக்காலப் பத்திரிகைகள் சான்று பகருகின்றன. (பல பத்திரிகைகளைக் குழுவினருக்குச் சமர்ப்பித்தார்)

● கத்தோலிக்கர்கள் தமது சமயத்துக்காக நாட்டின் நன்மையைக் கருதமாட்டார்கள் என்ற குற்றச்சாட்டும் ஆதாரமற்ற வீண் பிதற்றலாகும். நாம் எமது சமயத்தை எவ்வளவு நேசிக்கிருேமோ அவ்வாறே எமது நாட்டையும் நேசிக்கின்ருேம். ஆன்ம விஷயங்களில் எமக்கு வத்திக்கான் வழிகாட்டுகின்றது. ஆனல் அரசியற்கருமங்களில் எமக்கு

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

## வீரத்துக்கு ஒரு பரிசு

இருவருடங்களுக்குமுன் கொங்கோ தேசத்தில், கொங்கோலா என்னும் இடத்தில் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் சபைக்குரவர் 20 பேர் அங்குள்ள சுதேசிகளின் கையால் மரணித்தனர். அப்போது ஒருவீர பிரித்தானியர் முன்வந்து, கையில் ஒரு தடிமாத்திரம் உடையவராய் எஞ்சி இருந்த ஒரே ஒரு குருவானவரை இட்டுச்சென்று பாதுகாத்துவைத்தார். இவ்வீரனின் பெயர் மேஜர் றிச்சட் லோசன. இவர் மறு தருணங்களில் வேறுபல குருமார், சந்நியாசிகள், கன்னிகாஸ்திரிகளையும் ஆபத்தில்இருந்து காத்துவைத்தார். ஏற்கனவே இவருக்குப் பிரித்தானிய தேச அரசாங்கமும், பெல்ஜியதேச அரசாங்கமும், வீரபட்டங்கள் அளித்து மரியாதை செய்திருக்கின்றன. அண்மையில் பரிசுத்த தந்தை அர்ச். சில்வஸ்ரர் சபைக்குரிய வீரப்பரிசை இவருக்கு அளித்து அதை இஸ்பிரீத்துசாந்து சபைத் தலைவர் கைகளினுல் இவர் பெற ஒழுங்குகள் செய்திருந்தார்.

## சூடான்தேச அகதிக்குருமாரின் லூர்துபதியாத்திரை

இருமாதங்களின்முன் ஆபிரிக்க கண்ட சூடான் தேசத்தில் தொண்டாற்றிவந்த சுமார் 200 குருமாரும், சந்நியாசிகளும் அத்தேச அரசாங்கத்தினுல் நாடுகடத்தப்பட்டனர். அவர்களுட் பலர் இன்று இத்தாலி தேசத்தில் வசித்து சூடான் தேசத்துக்கு மீளவும் போகும் தருணத்தை எதிர்பார்த்திருக்கின்றனர். இக்குருமார் சந்நியாசிகள் கன்னியாஸ்திரிகள் ஒன்றுசேர்ந்து சென்றவாரம் லூர்து திருப்பதிக்கு யாத்திரை சென்றனர். அங்கே, (1) தாம் திரும்பவும் சூடான்தேசம் சென்று தொண்டாற்றும் காலம் விரைவில் வரவும்; (2) அத்தேச கத்தோலிக்கர் யேசுநாதரை மறவாதிருக்கவும்; (3) சூடான் தேச இஸ்லாமிய அரசாங்கமானது தான்செய்யும் பிழையை உணர்ந்துகொள்ளவும், தேவ தாயாரிடம் இரந்து மன்ருடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**ஆனி மாதம் — 1964.**

| | | | |
|---|---|---|---|
| 1 | தி. | அர்ச். அஞ்சலம்மாள் | [வெ] |
| 2 | செ. | காலதினம் | [ப] |
| 3 | பு. | காலதினம் | [ப] |
| 4 | வி. | அர்ச். பிரான்சீஸ் கறெக்சி | [வெ] |
| 5 | வெ. | யேசுவின் திரு இருதயத் திருநாள் | [வெ] |
| 6 | ச. | அர்ச். நோர்பேட் | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

**1964-ம் ஆண்டு வைகாசி மாதம் 30-ந் திகதி**


# அன்பின் சின்னம்

அன்பின் சின்னம் இதயம். உண்மை அன்பு அங்குதான் உதயமாகிறது

அன்பு என்பது புறக்கண்ணுக்குத் தெரியாத ஒன்று. அகக் கண்ணால் மட்டுமே அறியப்படுவது.

சகோதர பாசம், தாய்ப்பாசம், காதலர் அன்பு என்றெல்லாம் அன்பு பலவகைப்படுகிறது.

உதட்டிலே உருவாவது போலிஅன்பு. அது சுயநலத்தையே அடிப்படையாகக்கொண்டது.

உண்மை அன்பு உள்ளத்திலிருந்து பிறக்கின்றது. அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு என்பது அதன் கொள்கை.

அன்பு கண்ணினால் காணப்படாதது. ஆயின் வார்த்தையால், பார்வையால், செயலினால் அதன் உருவம் வெளிப்படுகிறது.

அன்புக்கு உருவம் இல்லை. ஆயின் இதயத்திலிருந்து அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் குறையாதது அது.

எவ்வளவுதூரம் அன்பு வெளிப்படுகிறதோ அதற்குமதிமாக உள்ளத்தில் ஊற்றெடுக்கின்றது அது.

அன்பு இறைவனின் சின்னம். அன்பினால் உருவாகியவர் அவர்.

எம்மேல் கொண்ட அன்பினால் தேவன் எமக்காக அளித்த நன்மைகள் ஏராளம்.

தமது ஏக குமாரனையே எம்மத்தியில் அனுப்பியமை அவற்றுள் சிறந்தவொன்று.

அந்த மைந்தனின் இரட்சணியப்பலிகள் தேவன் எம்மேல் கொண்ட உண்மை அன்பை எடுத்துக் காட்டுகின்றன.

அத்தேவகுமாரன் உண்மை அன்பு பிரவாகிக்கும் தம் இதயத்தையே எமக்களித்துள்ளார்.

அந்த இதயத்தை எம் பாவச்செயல்களால் அடிக்கடி புண்படுத்தி வருகின்றோம்.

இது தகுமா? எம்மேல் உண்மை அன்புகாட்டும் உள்ளத்தை மனம்நோகச் செய்யலாமா?

மனிதரின் செயல்களால் நொந்து வருந்தும் எனது இதயத்தைப்பார் எனக் கிறிஸ்து. மார்க்கரித் மரியம்மாளிடம் முறையிட்டார்.

யேசுநாதரின் திரு இருதயம் பாவிகளின் அடைக்கலத்தலம்.

பாவச் சோதனைகளிலிருந்து விலக, எமது இதயங்களை அந்த உள்ளத்திடம் ஒப்படைத்துவிடுதல் அவசியம்.

அந்த இதயத்தின் அன்பு எங்கள் இதயங்களிலும் ஊற்றெடுத்தல் வேண்டும்.

யேசுவின் மகிமையுள்ள திரு இருதயமே எங்கள் இதயங்களை உமது இதயத்துக்கொத்ததாகச் செய்தருளும்.

"விக்கூர் கூஸ், நூமா, கொன்பூசியஸ் இவர்களிடத்தில் வெறும் சட்ட நிபுணர்களுக்குரிய குணங்களேயன்றி தெய்வத்துக்குரிய எந்தக் குணாதிசயத்தையும் காணேன் ...... ஆனால், கிறிஸ்துவோ முற்றிலும் வேறுபட்டவர். அவரிடத்திலுள்ளதெல்லாம் என்னைத் திகைக்கச்செய்கின்றது. அவருடைய ஆத்மா என்னைப் பிரமிக்கச்செய்கின்றது. அவருடைய மனோவலிமை என்னைக் கலங்கச் செய்கின்றது. உலகிலுள்ள மற்றெல்லாப் பொருட்களோடு அவரை ஒப்பிட்டுப்பார்ப்பதற்கு இயலவே இயலாது."—நெப்போலியன்.

# சற்பிரசாதத் திருநாள்

(பி. சவரிமுத்து).

தேவன் மக்களைப் பலவித உணவு வகைகளாற் போஷிக்கிறார். கோதுமையின் கொழுமையினால் அவர்களைப் போஷிக்கிறார். தேனைக் கொண்டும் மச்சம் மாமிசம் முதலியவற்றைக் கொண்டும் மக்களுக்கு உணவூட்டி வருகிறார். ஆனால், மக்களின் ஆன்ம ஈடேற்றத்தையே தமது முக்கிய நோக்கத்துடன் இப்பூவுலகில் மனிதனாய் அவதரித்த நமதாண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதர் ஆத்துமாக்களின் உணவாகத் தம்மையே மக்களுக்கு அளிக்கச் சித்தமானார். மன்னா என்னும் அப்பத்தைத்தின்ற இஸ்ரவேல் சனங்கள் மாண்டனர். "ஆனால், என்னைப் புசிக்கிறவன் என்னால் நித்தியத்துக்கும் சீவிக்கிறான்" என்று அவர் வாக்களித்திருக்கிறார். அதெப்படியெனில் அன்பே உருவாகிய எங்கள் கடவுள் தம்முடைய திருமரணத்தினால் மனிதரைப் பாவஅடிமைத் தனத்திலிருந்து மீட்டுவிட்டதுபோதுமென்று இராமல் அற்ப புழுக்களாகிய எங்களுக்குத் தம்முடைய திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் ஞானபோசனமாகத் தந்தருளச் சித்தமானார். அவர் மனுஷரை மீட்கச் சிலுவையிலே பலியாகுமுன், அந்தப்பலியைத் தானே அதற்கு முந்திய நாளாகிய பெரிய வியாழக்கிழமையன்று அப்பத்தினும் இரசத்தினும் குணங்களுக்குள்ளே பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுக்கலானார். பெரியவியாழக்கிழமை இரத்தஞ்சிந்தாமல் ஒப்புக்கொடுத்த பலியே பெரிய வெள்ளிக்கிழமை இரத்தஞ்சிந்தி நிறைவேற்றப்பட்டது. சற்பிரசாதப்பலி சிலுவைப்பலியோடு ஒன்றாயும் அதை நினைப்பூட்டுவதாயும் இருக்கிறதினால், திவ்விய பூசையைக் கர்த்தர் தாம்பட்ட திருப்பாடுகளின் நினைவாகச் செய்யும்படி கற்பித்தருளினார். நம்முடைய பூசைப்பலிப்பீடம் சிலுவைப் பீடத்தில் நடந்ததையே தொடர்ந்து நடப்பித்துக் கர்த்தருடைய மரணத்தைக் காட்டுகின்றது. பூசைப்பலியில் நாம் உத்தமமான விதமாய்ப் பங்குபற்றத்தக்கதாக அந்தப்பலிப்பொருள் நமக்குப் பூசைவேளையில் நமக்குப் போசன மேசையாகக் கொடுக்கப்படுகிறது

ஆனால், குருவானவர் எமக்குக் கூறுவதுபோல எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவின் சரீரம் எங்கள் ஆத்துமத்தை நித்திய சீவியத்துக்குக் காப்பாற்றும் பொருட்டே நாம் சற்பிரசாதத்தைப் பெறுகிறோம் என்பதை நாம் நன்குணரவேண்டும். ஏனெனில், "எவனாகிலும் இந்த அப்பத்தை அபாத்திரமாய்ப் புசிப்பானாகில் அல்லது கர்த்தருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுவானாகில், அவன் ஆண்டவருடைய சரீரத்தின் மட்டிலும், இரத்தத்தின் மட்டிலும் குற்றவாளியாவான்...எவன் அபாத்திரமாய்ப் புசித்துப் பானம் பண்ணுகிறானோ, அவன் தன் ஆக்கினைத் தீர்ப்பையே புசித்துப் பானம் பண்ணுகிறான்" என்று அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் வற்புறுத்தியிருக்கிறார் (I கொரிந். 11: 23—29).



ஆகவே, "கள்ளக் கொம்பிசம்", "கள்ளச் சற்பிரசாதம்" என்று ஆதிக்கிறீஸ்தவர்களுக்குள் நடைமுறையிலிருந்துவந்த சொற்றொடர்கள் எமது கவனத்துக்கு இத்திருநாள் காலத்தில் கொண்டுவரப்படவேண்டும். மனஸ்தாபம் இல்லாத பாவசங்கீர்த்தனம் மேலதிகமான ஒரு பாவமாக இருக்கிறது. அது போலவே சாவான பாவத்துடன் சற்பிரசாதத்தை உட்கொள்வோர் சகலரும் பாரதூரமான ஒரு சாவான பாவத்தைக் கட்டிக் கொள்ளுகின்றனர் என்பதை நாம் மறத்தலாகாது.

சற்பிரசாதம் தான் உண்மையாகப் பரலோகத்திலிருந்து இறங்கின எங்களின் ஆத்துமங்களின் உணவாகிய அப்பம். எங்களைப் புனிதராகமாற்றும் அமிர்தம் போன்ற அப்பம். எங்கள் ஆத்துமங்களின் சர்வரோக நிவாரணியாகிய பரம ஔடதம். பாவத்தை ஜெயித்துப் புண்ணியபாதையில் நடக்க நமக்குப் பெலனும் வழிகாட்டியுமான பரலோகஅப்பமே—சற்பிரசாதம். "திவ்விய நற்கருணை ஆண்டவரே எங்களை இரட்சித்துக் காப்பாற்றியருளும், ஆமென்.

# கிறிஸ்தவசபைகள் ஒன்றுசேர்தலில் ஒரு புதிய அனுபவம்

இங்கிலாந்திலும் மறு இடங்களிலும் பல கிறிஸ்தவ சபைகள் பல வகைகளில் ஒன்றுசேர்ந்து இயங்க முயல்கின்றன. ஆனால், பின்கூறப்படும்முறை மறுமுறைகளிலும் நவீனமாகத் தோன்றுகின்றது. ஐந்து கிறிஸ்தவ சபைகள் ஒன்றுசேர்ந்து இங்கிலாந்தில் யோர்க் நகரில் அக்கோம் என்னும் விசாரணைப்பங்கில் இம்முறையை ஒரு பரிசோதனையாக மிக ஊக்கத்துடன் நடத்திவருகின்றன. "ஆன்ம உணர்ச்சி அழிந்து சடப்பொருளே உண்மையென்ற சிந்தனைமேற்கொண்டு, அணுக்குண்டு முதலிய அழிவுப்பாதையில் உலகும் போய்க்கொண்டுவரும் இந்நாட்களில் கிறிஸ்தவ வேத அடிப்படை ஒழுக்கத்தை அக்கோம் பகுதியில் உள்ள ஒவ்வொருவருக்கும் வற்புறுத்தவிரும்புகிறோம்" — இதுவே இக்கூட்டு இயக்கத்தின் செய்தியாகும், இச்செய்தியை அப்பகுதியில் உள்ள ஒவ்வொருவருக்கும் கொண்டு செல்கின்றனர். செல்லும்போது இருவர் இருவராகச் செல்கின்றனர். ஞாயிறு தினங்களில் கூட்டுப்பிரசங்கங்கள் நடக்கின்றது. ஒவ்வொரு சபையின் பிரதிநிதிகளும் தங்கள் போதனைகளை எடுத்துக் கூறுவார்கள். சபையில் உள்ள எவரும் விளக்கங்கள் கேட்கலாம். ஆனால், குறுக்குக் கேள்விகளோ விவாதங்களோ நடப்பதில்லை. ஞாயிறு கூட்டங்கள் வெவ்வேறு சபைகளின் மண்டபங்களில் மாறிமாறி வைக்கப்படுகின்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சகோதரிகளே, வணக்கம்!

## ஈராண்டு நினைவிதழ்

கும்மியடி ஈழநாடு முழுவதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
மங்கையர் நலன்விழை "மகளிர் மன்ற"த்தின்
மங்கள ஈராண்டு நிறைந்ததென்றே
கும்மியடி! கும்மியடி!

●

சிந்தனைக் கட்டுரை சிறப்புறு கவிதைகள்
சிந்தையில் இனித்திடத் தாங்கிவந்தே
சிந்திக்கச் செய்தெமைச் சீருறுநல்வழி
சிறப்புற நடாத்திட வேண்டுமென்றே
கும்மியடி! கும்மியடி!

●

நம் மங்கையர் நற்பண்பில் ஓங்கிடவும்
நன் மைந்தர்கள் நல்வழி நாடிடவும்
நல்ல இறைவனின் ஆசியை இரந்தே
நலனுற வாழ்ந்திட வேண்டுமென்றே
கும்மியடி! கும்மியடி!

ரோஜா.

# நாட்பூசையின் நலன்கள் பல!

நாட்பூசைக்குப் போவது நம்மவரில் பலருக்கு முடியாததென்பது உண்மையே. ஆயின், நாட்பூசையினால் விளையும் அளப்பரியநன்மைகளை நாம் அறிவோமானால் எம்மால் இயன்றமட்டும் தப்பாது அத்திருப்பலியில் பங்குபற்ற முயலமாட்டோமா? நாட்பூசையினால் நம் ஆத்துமத்துக்கு உண்டாகும் நன்மைகளோ ஏராளம்! ஏராளம்! ஆயின், சரீரசகாயங்களும் நமக்கு அபரிமிதமாகக் கிடைக்கின்றனவென்பது உண்மையே! அதை விளக்குமுகமாக இரு உதாரணங்கள் தருவோம்:

அர்ச். இசிதோரைப்பற்றி நம்மில் அநேகர் கேள்விப்பட்டிருப்போமே. அவர் ஓர் எஜமானின்கீழ் அவரது வயற்பண்ணையில் வேலைசெய்யும் விவசாயியாகத் தம்காலத்தைக் கழித்தார். ஆயின், நாள்தோறும் திவ்வியபூசை கண்டபின்னரே அவர் தமதுவயலை நாடிச்செல்வார். இது மற்றவேலையாட்களுக்குப் பிடிக்கவில்லை. காலந் தாழ்த்தி அவர் வயலுக்குவந்தாலும், அவரதுவயலில் அறுவடைகாலத்தில் விளைச்சலோ அமோகமாகக் காட்டிற்று. இதனால் பொறாமைகொண்டனர் அந்த வேலையாட்கள். எஜமானிடம் சென்று முறையிட்டனர். எஜமானுக்கு இசிதோரில் அன்புமிகுதி. பிரமாணிக்கம்நிறைந்த ஊழியனை யார்தான் விரும்பார்! அடிக்கடி முறைப்பாடுகள் வந்துகொண்டிருந்தமையால் நேரில் சென்றுபார்க்க எண்ணினார். ஒருநாள் காலைவேளை எஜமான் வயற்பண்ணையைச்சுற்றிப் பார்த்துக்கொண்டே வந்தார். எல்லா வயல்களிலும் மற்றவேலையாட்கள் உழுதுகொண்டே நின்றார்கள். இசிதோர் தமதுவயலில் இல்லாதிருந்ததால் "இன்று அவருக்கு வேலையில் சீட்டுக்கிழிப்புத்தான்" என்று அவர்கள் தமக்குள்ளே பேசிக்கொண்டனர். எஜமான் இசிதோரின் வயலருகே வந்தார். ஆ! என்ன அதிசயம். இரு வெள்ளைமாடுகள் பூட்டப்பட்டஏரை வெண்ணிற ஆடையணிந்த சம்மனசொன்று செலுத்தி உழுது கொண்டிருந்தது. மற்றொரு சம்மனசு வயலில் களைபறித்துக் கொண்டிருந்தது. திரும்பிப்பார்த்தார். இசிதோர் நாட்பூசைமுடிந்து வீடுதிரும்பி வந்து கொண்டிருப்பதைக் கண்டார். தேவன் தம்மைத் தேடும்ஊழியனை எவ்விதம் நேசிக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டார். இசிதோருக்கு உடனே தானே தமது வயற்பண்ணை மேற்பார்வையாளனாகப் பதவிஉயர்வு கொடுத்தார்.

கங்கேரிதேசத்து எலிசபேத்தம்மாளின் வரலாறு சிலவாரங்களின்முன் நம் மகளிர்மன்றத்தில் வெளியானதல்லவா? அவ்வர்ச்சியசிட்டவளின் உறவினளான மற்றொரு எலிசபேத் இளவரசி இருந்தாள். இவள் போர்த்துக்கால்தேச இளவரசனை மணந்துகொண்டு, அந்நாட்டு அரசியானாள். இவளும் ஹங்கேரிதேசத்து எலிசபேத்தம்மாளைப்போலத் தானதருமம் செய்வதில் கண்ணானவள். அரசனும் ஓரளவு இந்நற்செய்கையை ஆதரித்தான். இதனால் பொறாமைகொண்ட இளவரசனின் குடும்பத்தவர் அவளை ஏதாவது குற்றத்தில் கண்டுபிடித்து அரசனிடம் தண்டனைபெறச் செய்யவேண்டுமென்று கண்ணுங்கருத்துமா யிருந்தனர். இந்த அரசி அந்நாட்டுச் சேனாதிபதியான யோசெவ் என்பவரையே தானதருமம்செய்யும் அலுவல்களில் தனக்கு உதவிக்காக அழைத்துச் செல்வாள். ஆகவே, யோசெவ்உடன் அவள்தகாத உறவுபூண்டதாக அவள்மேல் குற்றஞ் சாட்டினர் அந்தக் கல்நெஞ்சர். அரசன் கோபவெறி கொண்டான். விசாரணையின்றியே சேனாதிபதியைக் கொன்றுவிட முனைந்தான். ஆகவே, தனது கொலைஞனை இரகசியமாகக் கூப்பிட்டு, "நாளைக்காலையில் யாரை உன்னிடம் முதல்அனுப்பி வைக்கிறேனோ அவன் யாராயிருந்தாலும் அவனை உடனே கொன்றுபோடு" என்று கட்டளையிட்டான். அடுத்தநாட் காலையில் சேனாதிபதி யோசேப்பைக் கூப்பிட்டு ஒரு சீட்டைக்கொடுத்துக் கொலைஞனிடம் அனுப்பினான். யோசெவ் குதிரையில் அமர்ந்து கொலைஞனிடம் சென்றான். வழியில் ஒருகோயிலை அண்மியதும் நாட்பூசைகண்டு பழக்கமுடைய அவன் குதிரையைவிட்டு இறங்கிப் பூசைகாணச் சென்றான்.

இதற்கிடையில் அரசன் தன்னிடம் அரசியைப்பற்றி அபாண்டம் சொன்ன தனது உறவினனை ஒருவனை அழைத்து, மேற்படி கொலைஞனிடம் போய் நான்சொன்னவேலை முடிந்திருக்கிறதா என்று பார்த்துவா என்று அனுப்பினான். துரதிர்ஷ்டவசமாக இந்த உறவினனே அன்றுகாலையில் அரசனிடமிருந்து கொலைஞனிடம் வந்தவனானான், கொலைஞன் அவனது எவ்வித சொற்களுக்கும் செவிகொடுக்காது அவனைக் கொன்றுவிட்டான். சேனாதிபதி யோசெவ் பூசைமுடிந்ததும் சீட்டைக் கொண்டுபோய்க் கொலைஞனிடம் கொடுத்துவிட்டுத் திரும்பி அரண்மனைக்கு வந்தார். இதற்கிடையில் கொலைஞனிடமிருந்து அரசனின்கட்டளையைத் தான்நிறைவேற்றிவிட்டதாகச் செய்தியும் வந்திருந்தது. சேனாதிபதியை உயிருடன்கண்ட அரசன் திகைத்தேபோனான். விஷயங்களை அறியநேர்ந்தபோது அவன் அரசி—சேனாதிபதியின் மாசற்ற தன்மையையும், நாட்பூசையின் பலனையும் அறிந்து வியந்தான்.

நாட்பூசை நமக்கு அடைந்துதரும் சகாயங்கள் இச்சிறு கதைகளினால் நமக்குத் தெளிவாகிறதல்லவா?

# அம்மாஎன்றே அழைக்க நீ இங்கு இல்லை.....!

"கண்ணே! விமலி! இவ்விதம் உடல்தெரிய உடுத்திக்கொண்டு நீ வெளியே புறப்படலாமா? இது மற்றையோர் பாவத்தில்விழக் காரணமாகுமே" என்று தன்பேத்தியை அன்புடனே கண்டிக்கிறாள் அந்தமூதாட்டி. "இதுதான் இன்றைய நாகரீகம். உனக்கிதெல்லாம் தெரியுமா? நீபோய் பேசாமலிரு. போகிறவழிக்குப் புண்ணியத்தைத் தேடிக்கொண்டு" என்று தன் அன்னையை அதட்டி அடக்குகிறாள் விமலியின் அன்னை. ஆம், பெற்ற அன்னையைத் தட்டிமடக்கும் பிள்ளைகள் இன்று அனந்தம், அனந்தம்! பெற்ற அன்னையே சிலபிள்ளைகட்குப் பாரமாகி விடுகின்றனர். இன்றோ இந்தக் கல்மனம்கொண்ட பிள்ளைகள் "அன்னையும், தந்தையும் பின்னடிக் கிடைஞ்சல்" என்ற புதுமொழியையும் வாய்கூசாது தமக்குள்ளே பரிமாறிக் கொள்கின்றனர். "உப்புச் சமைந்தால் தெரியும் உப்பின் அருமை" என்பார்கள். ஆம்! அன்னையின் அன்பை இழந்தவர்கட்கு அவளின் மேன்மை அதிகம் தெரியவரும்.

அன்னை என்றசொல்லுக்குச் சுயநலமற்ற அன்புள்ளவள் என்று அர்த்தம் கூறலாம். பரமனிடம் இரந்து உதரத்தில் கனியை ஏற்றுகிறாள். பத்துமாதம் சுமந்து பாடுபடுகிறாள். உயிர்த்துடிப்பு நிலையில் நம்மை உலகுக்குக் கொண்டு வருகிறாள். அல்லும்பகலும் உறங்காது அயராது நம்மை ஆளாக்குகிறாள். சிறுநடை பயிற்றுகிறாள். பேசக்கற்றுக் கொடுக்கிறாள். பரமனில் அன்புகொள்ளச் செய்கிறாள். பள்ளிக்கு வைக்கிறாள். பாடம் கற்றுத் தருகிறாள். தந்தையார் அடித்தால் ஓடிவந்து அரவணைக்கிறாள். தவறுசெய்து விட்டால் அவள் ஒருகை அடிக்கும். மறுகை அரவணைக்கும். மக்கள் வாழ்ந்தால் மகிழ்கிறாள். அவர்கள் கண்கலங்கினால் அவள் நெஞ்சு துடிக்கும். தன் உடல்நலம் பாராட்டமாட்டாள் மக்களுக்காகச் செய்யும் தொண்டில். சான்றோனெனத் தன்மகனை மற்றோர் புகழக்கேட்டால், ஈன்றபொழுதில் பெரிதுவப்பாள். அவன் கயவனாகிவிட்டால் கண்ணீரும், கம்பலையுமாய் அவனைத்திருத்த முனைவாள். தன் பிள்ளைகள் ஒருநேரம் பட்டினிகிடக்க அவள்மனம் பொறுக்க மாட்டாது. ஆனால், தானோ எத்தனை நாட்களுக்கும் பட்டினிகிடப்பாள் முகமலர்ச்சியுடன். தன் மக்கள் நலத்துக்காகத் தன் உயிரையே தியாகம் செய்துவிடவும் தயங்கமாட்டாள். "நட்டாயிரம் பட்டாயிரம்" பயன்தரும் என்பர் பனைமரத்தை. அன்னையும் அவ்விதமே. அவள் இறந்துபோனாலும் அவளின் ஒழுக்கநெறி அவள் பிள்ளைகளை ஆட்கொள்கிறது. அன்னையின் அன்பு பிள்ளைகளை ஒற்றுமையாக வாழச் செய்கிறது. அன்னையின் நினைவில் அவர்கள் தம்மிடையேயுள்ள கோபதாபங்களையும் மறந்துவிடுவர். அன்னையின் பெயரை நிலைநாட்ட வேண்டுமென்ற குறிக்கோளுடன் அவர்கள் வாழமுனைவர்.

எத்தனையோ பிள்ளைகள், தாம் அறியாப்பருவத்தே, மழலைபேசுகையில், தவழும் வயதில், நடைபயிலுகையில், வாழும் பருவத்தில், எனப் பலவிதமாக தம் அன்னையை இழந்துவிடுகின்றனர். அன்னையின் அன்பைப்பெறத் துடிக்கின்றனர். அவர்கள் இல்லம் ஒளியிழந்து விடுகிறது. கயிறறுந்த பட்டம்போன்றதாகி விடுகின்றது அவர்கள் வாழ்க்கை. ஒளிகாட்டும் கலங்கரை விளக்கமில்லாது போய்விடுகின்றனர். வாழ்க்கை அனுபவங்களை சொல்லிக்கொடுக்க, வாழ்வில் வழிகாட்ட அவர்கட்கு யாருமில்லை. உத்தியோகம், செல்வம், பொருள், பண்டம் யாவும் இருந்துமென்? அன்னையென்ற அன்புச்சுடர் இல்லாதபோது. "ஆம்! அம்மா என்று அழைக்க நீ இங்கு இல்லை" என்றே அவர்கள் உள்ளம் ஓலமிடும்.

ஒருமுறை ஒரு வாலிபன் ஓர் அழகான பெண்ணிடம் காதல் கொண்டான். அவளோ துர்நடத்தையுள்ளவள், பழிபாதகத்துக்கஞ்சாதவள். ஆனால், அவனுக்கோ காதல் கண்ணை மறைத்துவிட்டது. அவ்வாலிபனின் அன்னையோ அவன் நலத்தை முன்னிட்டு அவளை மணஞ்செய்ய வேண்டாமென்று தடுத்தாள். இதை அவ்வாலிபன் தன் காதலரசியிடம் கூறினான். அவளோ கோபவெறி கொண்டாள். "நான் உன்னை மணம்புரிய வேண்டுமானால் அவ்விதம் தடுக்கும் உன் அன்னையைக் கொன்று அவள் இருதயத்தை எடுத்துவா. அன்றேல் நான் உன்னைத் திரும்பியும் பார்க்க மாட்டேன்" என்று கூறிவிட்டாள். காதலியின் வார்த்தையை நிறைவேற்றப் புறப்பட்டான். நெஞ்சைக் கல்லினும் கடினமாக்கினான். அன்னையின் மார்பைக் குத்திக்கிழித்தான். அவள் இதயத்தைக் கையிலெடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாகச் சென்றான். வழியில் கல்லொன்று இடறிவிட்டது. குப்புற விழுந்தான். அவன் கையிலிருந்த இதயம் கல்லில் அடிபட்டு இரண்டாகப் பிளந்தது. இதயத்திலிருந்து ஒரு குரலொலி. "மகனே! உனக்கு எங்காவது காயம் பட்டதா? என்றது அது. துடித்தான் கல்மன வாலிபன். அவன் செய்த அக்கிரமம் என்ன? அதைமறந்து அன்னையின் இதயம் கேட்கும் வினா என்ன? மனம்கசிந்தான். அந்தோ! அம்மா என்று அழைக்க இனி நீ இங்கு இல்லையே! என்று ஓலமிட்டான். பாவநெறியை நீக்கினான். உள்ளத்தை உருக்கும் இச்சம்பவம் ஓர் அன்னையின் அன்பைக். காட்டுகிறதே. இத்தகைய பெருமைக்கு வித்தாகவும், வாழ்க்கையின் ஒளிஸ்தம்பமாகவும் விளங்கும் அன்னையை நாம் என்றும் போற்றுவோம். அவள் வாழ்நாளில் அவளை நேசித்துத் தொண்டு செய்வோம், அவள் ஆன்மா சாந்தியடைய ஆவனபுரிவோம். அவள் பெயர்விளங்க வைக்க நாம் நல்வழியில் சீவிப்போம்.

அன்னையின் அன்பே அன்பு!

செல்வி ரோசா சாமுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு பெற்றேன்

இதயத்தைக் குளிர்விக்கும் தென்றல்தேடி
ஏகினேன் கடற்கரைக்கு மாலைவேளை ;
அடிவானம் எங்கும் பெரும் அழகுக் கோலம்
ஆதவனும் எழில் காட்டி மறையும் நேரம்
கடல் பொன்னாய் நிறம்மாற மீனினங்கள்
களிப்படைந்து துள்ளி விழ, அலையும் மோத
உடல் தழுவித் தென்றல் புது உணர்வையூட்ட
உள்ளமதைப் பறிகொடுத்தேன், உவகைகொண்டேன்.

●

கொஞ்சுகின்ற முகிற்குலத்தைக் கிழித்துக்கொண்டு
குளிர் நிலவாள் முகம் காட்டி முறுவலித்தாள்
விஞ்சுகின்ற தம்அழகை விண்மீன்காட்ட
வியந்திருந்தேன், இன்பம்! இன்பம்!! காட்சியாவும்
அஞ்சுகமாய்ப் பெண்ணொருதி அருகில் வந்து
அலட்சியமாய் எனைப்பார்த்தாள் ; பின் தயங்கி
கொஞ்சுகின்ற குரலினிலே இலாவகமாய்க்
கிடாவினாள் கேள்வி ஒன்று, உணர்வு பெற்றேன்.

●

"உமை மறந்த நிலையினிலே இருப்பு ஏன்"? என்றாள்
"உண்மையான இவ்வழகில் இலயிப்பு" என்றேன் ;
"இமைமூடும் பொழுதில் இவ்வழகழியும்
இருக்கின்ற காட்சி இன்பம் யாவும் பொய்யாம் ;
எமை மயக்கும் உலகஇன்பம் அப்படியே"
என்றுரைத்தாள் இன்னும் பல எடுத்துரைத்தாள்.
அமைதியுடன் அவள் சொன்ன உரையைக் கேட்டு
ஆழ்ந்து விட்டேன் சிந்தனையுள் அறிவு பெற்றேன்.

●

"மணம் வீசும் மலரினங்கள் மறுநாட் சென்றால்
வாடிவிடும் சோலை எழில் மங்கிப் போகும் ;
பணம் மாறிப் பலரிடத்தும் சென்றழியும்
பருவ எழில் உருவ எழில் பாரின் காட்சி
கணம் மறையும் காலங்கள் மாறிவிடும்
காண்பதெல்லாம் உலகில் இன்பம் இல்லை" என்றாள்
குணம் நிறைந்த அவள் உரையால் உண்மை ஞானம்
கண்டேன் நான் மறைவழியைக் கருத்தில்கொண்டேன்.

ஆசிரியர், ச. அமிர்தநாதர்

---

## வாழ்வாங்கு வாழ...4

# என்பும் கொடுங்கள் பிறர்க்கு

ஏ. பி. வி. கோமஸ்

மற்றவர்களுக்காக நீங்கள் உங்கள் எலும்பை முதலாய்க் கொடுக்க முன் வாருங்கள் என்றால், மதிப்புக்காகவும், மங்காத புகழுக்காகவும் அல்ல என்பதை நாம் முதலில் மனதில் நன்கு பதித்துக்கொள்ள வேண்டும். எதிரியானாலும் அவனுக்கு ஏற்றதைச் செய்யவேண்டும் என்பது நம் யேசுநாதரின் வாக்கு. இல்லையா? 'ஒருவன் உன் வலது கன்னத்தில் அறைந்தால் உன் இடது கன்னத்தை அவனுக்குத் திருப்பிக்காட்டு' என்று வசனித்தாரே நம்நாதர். ஆனால்......

திருமறையின் சத்தியங்களுக்கு இயைய நடக்கும் திருவாளர்களில் எத்தனைபேர் இவ்வாக்கினை முற்றாக ஏற்று நடந்து வருகின்றார்கள். மிக மிகக் குறைவு. ஆனால், இந்த நல்ல நிலையை தனிஒருவன் தன்சொத்தாக ஆக்கிக்கொள்ளும் வரையிலும், நாம் தலைப்பில் சொன்ன 'என்பையும் பிறர்க்குக் கொடுக்கும், நிலையினை அடைய முடியாது. ஏன்? ஆம். ஏனெனில், அன்பு என்னும் அந்த அணையாத ஜோதி ஒருவன் அகத்தில் அதிதீவிரமாக எழுந்தால்தான் மேற்கூறிய இருநிலைகளையும் ஒருவன் அடைந்திட முடியும். அன்பே இந்த இரண்டுக்கும் அத்திவாரம். அப்படியென்றால் 'என்பும் பிறர்க்குக் கொடுக்க' நம் மனதில் முதற்கண் அன்பு உதிக்க வேண்டும் ; வளரவேண்டும். இனி...

என்பைக் கொடுக்கும் போதோ அல்லது எள்ளளவு பொருளைத்தான் கொடுக்கும்போதோ பெயருக்காகவும், புகழுக்காகவும் கொடுக்காமல், பெற்றுக்கொள்பவரே அறியாதவாறு நற்செயலாகக் கொடுக்கலாம். இதனாலன்றோ, 'உன் வலது கரம் கொடுப்பதை இடது கரம் அறியாதிருக்கக் கடவது'என்று திருவுளம் பற்றப்பட்டுள்ளது. வானத்துச் சூரியன், மோனத்தில் இருக்கும் மலர்கள், கானத்தில் மிதந்துவரும் இசை, பானத்தில் கூடிவரும் சுவை இவையெல்லாம், தான் கொடுப்பதைத் தான் அறியாதவை யல்லவா? மக்கள் மனதுக்கும், மற்றும் உடலுக்கும் இன்பமும் இதமும் கொடுக்கும் இவைகள், தம்மை யறியாமலே, பிரதி பலன் எதிர்பாராமலே தம்மிடம் உள்ளவைகளைக் கொடுக்கின்றன. நாம் கண்டறியும் உண்மை ; அன்றி எண்ணியறியா உண்மை. இல்லையா? அப்படியெனில் இந்த இயற்கைப் பொருள்கள்தரும் பாடத்தை நாம் படித்துக் கொண்டால்....என்னென்று எழுதுவது? மோட்சத்தைக் காணலாமே இந்த உலகத்தில். அவ்வாறு காணவேண்டும் என்பதனால்தானே யேசுநாதர் இப்படிக்கூறினார்......

"கொடுங்கள் உங்களுக்குக்கொடுக்கப்படும் ; அமுக்கவும் குலுக்கவும் பட்டுச் சரிந்துவிழும் நல்ல அளவை உங்கள் மடியில் போடுவார்கள். ஏனெனில், நீங்கள் அளந்த அளவினாலேயே உங்களுக்கும் பதில் அளக்கப்படும்" (லூக். 6 : 38).

நாம் இப்படிச் செய்யவேண்டும் என்று பலமுறை எண்ணத்தான் செய்கிறோம். ஆனால், செயலில் காட்டுவது தான் கடினமாயிருக்கிறது. இல்லையா? அப்படியெனில் எப்படி இந்த நல்ல பழக்கத்தை நாம் கைக்கொள்வது என்று என்னிடம் கேட்டால் ; 'நம் மூத்த சகோதரனாகிய யேசுவைப் பின்பற்றுவோமாக' என்றுதான் சொல்வேன் ; 'அமுக்கவும் குலுக்கவும்பட்டுச் சரிந்துவிழும் நல்ல அளவை' என்றவர் அதன்படி நடந்தாரா என்றால் ஆதாரங்கள் உண்டே ஏராளம். ஆம்...

தண்ணீரை இரசமாக மாற்றும் போது, பாத்திரங்களை வாயில் வழிந்தோடும்வரை நிரப்பும்படி சொல்லவில்லையா? வலைவீசிய அப்போஸ்தலர்களுக்கு, இரண்டு வள்ளங்களும் வழிந்தோடுமளவுக்கு மச்சத்தைக் கொடுக்கவில்லையா? ஏன், பசித்தவர்களுக்குப் புசிக்க அப்பத்தையும் மச்சத்தையும் பலுகச்செய்தபோது, எல்லாருக்கும் கொடுத்துப்போக, பன்னிரு கூடைகளில் நிரப்பவில்லையா மிகுதியானவைகளை. தன்னிடமிருந்த சக்தியைத் தாராளமாகக் கொடுக்கவில்லையா தம் அப்போஸ்தலர்களுக்கு ; தம்முடைய தலையிலும் பாதங்களிலும் பரிமள தைலத்தை வார்த்த ஸ்திரியை வானளாவப் புகழவில்லையா? இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாகத் தம்மனதிலிருந்த அன்பு அனைத்தையும் பாவிகளுக்காகத் தியாகம் செய்யவில்லையா ; ஏன்? தம்முடைய இரத்தக் குழாய்களில் ஓடிய கடைசித் துளி இரத்தம் வரையிலும், அதுவும் மிகவும் மகிமைக்குரிய, மேன்மைக்குரிய, விலைமதிக்கப்படாத திரு இரத்தம் முழுவதையும் பாவிகளுக்குத் தானமாகச் சிந்தவில்லையா ; அவ்வாறெனில், அவரின் திருப்பாடுகளைப் பற்றிச் சற்றுச் சிந்தித்தாலே நாம் வேண்டும், "என்புதனையும் பிறர்க்குக் கொடுக்கும்" எற்றம் மிகுக் குணம் தானகவே வந்து நம்மிடம் சரண்புகுமே.

ஆகையால், வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, வான்புகழ் நிலையடைய வேண்டுமெனில் "என்பும் பிறர்க்குக் கொடுக்கும்" நல்ல குணத்தை நாம் பெறும் வழிவகைகளைக் கைக்கொள்வோமாக. அதற்கு நம் நாதரின் வாழ்க்கை வரலாற்றை நன்கு படித்தறிவோமாக. வாசியுங்கள், வாசியுங்கள் விவிலியத்தை நாள் விடாது வாசியுங்கள்.

---

# மனுக்குலத்தின் அன்னை
# மரியன்னை

மரியன்னை யேசுவின் இயற்கை அன்னை. மனுக்குலத்தின் ஞான அன்னை. மரியன்னை யேசுவின் அன்னையாய் இருக்காமல் இருந்திருந்தால்— எம் ஞான அன்னையாய் வரமாட்டாள். மரியன்னையே யேசுவை பெத்லகேம் சிற்றூரில் பெற்றெடுத்தாள்—எம்மைக் கல்வாரிமலையில் ஞானவிதமாகப் பெற்றெடுத்தாள். கடவுள்மனிதனாய்த்தமது உதரத்தில் உதிக்கத் தமது சம்மதத்தைத் தெரிவித்தாள். கல்வாரிமலையில் யேசுக்கிறிஸ்துநாதரின் துன்பத்தில் பங்குபற்றினாள். யேசுநாதரோடு சேர்ந்து மரியன்னையும் அவருடைய பாடுகளோடும், மரணத்தோடும் பங்குபற்றினாள். யேசுக்கிறிஸ்துநாதரோடு சேர்ந்து விண்ணுலக தந்தைக்குத் தமது குமாரனைப் பலியாக ஒப்புக்கொடுத்தாள். யேசுநாதரோடுசேர்ந்து உலக இரட்சணிய அலுவலில் பங்குபற்றியபடியால் — மனுக்குலத்தின் அன்னையாய்த் திகழ்கிறாள். கல்வாரிமலையில் யேசுநாதர் என்ன காரியத்தை விரும்பினாரோ — அதே காரியத்தை மரியன்னையும் விரும்பினாள்.

இவ்வுலகதாய்மார் தம்பிள்ளைகளின் பிறப்பில் அதிகம் பங்குபற்றுகின்றனர். ஆனால், அவர்கள் வளர்ந்து உயர்ந்து, உன்னதபதவிகள் வகிக்கும்பொழுது அதிகம் பங்குபற்றுவதில்லை. தம் மக்களுக்குப் புத்திபுகட்டக்கூடும். ஆனால் தம் மக்களின் அலுவலகத்துக்குச் சென்று அவர்களோடு உத்தியோகம் பார்ப்பதில்லை. பிரான்ஸ் நாட்டுக்கும் இங்கிலாந்து நாட்டுக்கும், நெப்போலியனுக்கும், வெலிங்டனுக்குமிடையில் நடந்த சண்டையில், நெப்போலியனின் தாய், தனது மகனோடுசேர்ந்து இங்கிலாந்துக்கு எதிராகச் சண்டை பிடிக்கவில்லை. உலக சரித்திரத்திலே ஒரே ஒரு தாய்தான், அமலனின் அன்னை மாத்திரம்தான், அறத்துக்கும் மறத்துக்கும், நன்மைக்கும் தின்மைக்கும். கடவுளுக்கும் பசாசுக்கும் இடையில் நடந்த கடும்போரில் பங்குபற்றினாள். மரியன்னை யேசுநாதரோடு சேர்ந்து போர்க்களமாகிய கல்வாரி மலைக்குச் சென்றாள். யேசுநாதர் சிலுவையில் மரித்துப் பசாசின் இராச்சியத்தைச் சின்னாபின்னமாக்கினார். பசாசை வென்றார். மரியன்னையும் யேசுநாதரோடு சேர்ந்து பொய்யின் தகப்பன், தின்மையின் ஊற்றாகிய சாத்தானின் இராச்சியத்தை முறியடித்தாள். சாத்தானின் மாயவித்தையைக் கண்டு ஓடவில்லை மாமரி. யேசுநாதர் மரிக்கும்பொழுது சிலுவையின் பக்கத்தில் நின்று சாத்தானை மிதித்தாள், எதிரியை நசுக்கினாள். மனுக்குலத்துக்குப் புதுவாழ்வையும், வெற்றியையும் பெற்றுத்தந்தாள்.

அர்ச். இறணியஸ் கூறுவதற்கிணங்க ஏவாள் தனது கீழ்ப்படியாமையால் சிங்காரத்தோப்பின் கதவைச் சாத்தினாள்—மனுக்குலத்துக்குத் துன்பமும் மரணமும் ஏற்பட்டது. இரண்டாம் ஏவாளாகிய கன்னிமரியாய் தனது கீழ்ப்படிவால் சிங்காரத்தோப்பின் கதவைத்திறந்தாள். மனுக்குலத்துக்கு இன்பமும் புதுவாழ்வும் மலர்ந்தது. நாம் வாழும் இரட்சணிய கட்டத்தில், சங்கிலியில், கடவுள் மனிதனாய் அவதரிக்க மரியன்னையின் சம்மதத்தைக் கேட்டார். மரியன்னை மறுத்திருந்தால், கிறிஸ்துவின் அவதாரமில்லை. மனுக்குலத்துக்கு இரட்சணியமில்லை. மரியன்னை யேசுநாதரோடு சேர்ந்து கல்வாரிமலையில் ஒத்துழைத்தது, மரியன்னை கிறிஸ்துநாதரின் தாயாக வரக்கொடுத்த சம்மதத்தின் பூர்த்தியாகும், உச்சநிலையாகும்.

அர்ச். அகுஸ்தீனார் "மரியன்னை யேசுநாதரைப் பெறக்கொடுத்த சம்மதத்தால் — மனுக்குலத்தின் ஞான அன்னையாய் வந்தாள்" எனக் கூறுகிறார். அர்ச். எபிரேம் மரியன்னை உயிரினங்களின் அன்னை எனக் கூறுகிறார்.

மரியன்னை கிறிஸ்துநாதரின் தாய். கிறிஸ்துநாதர் எம் சகோதரர். எனவே, மரியன்னை எம் அன்னை. மரியன்னை யேசுநாதரைப் பெற்றெடுத்தாள், பாலூட்டித் தாலாட்டினாள். மரியன்னை உயிரின் கர்த்தரான யேசுநாதரை எமக்களித்தாள். எமது இரட்சணியத்துக்காகத் தம் மகனைப் பரம பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தாள். அவரால் எமக்குப் புதுவாழ்வும், உத்தானமும், உயிரும், ஒளியும், வரவேண்டும் என விரும்பினாள். கிறிஸ்துநாதர் மரிக்கும்பொழுது— மரியன்னைக்கு அருளப்பரை மகனாகக் கொடுத்தார். "ஸ்திரியே! இதோ! உன்மகன்." அருளப்பர் எங்கள் ஒவ்வொருவருக்காகவும் மரியன்னையைத் தாயாக ஏற்றுக்கொண்டார். மரியன்னையும் அருளப்பரை மகனாக ஏற்றுக்கொண்டாள். உண்மையாகவே மரியன்னை எம் அன்னை. நாம் அவளின் புத்திரர்கள்.

வே. அன்ரனி ஜோண்

---

### நன்றித்துதி

தமதிரித்துவத்தின் கிருபையாலும், பரிசுத்த தேவதாயார், அர்ச். சூசையப்பரின் வேண்டுதலாலும் எனக்குவந்த வருத்தம் குறைந்தது. வேறுமன்றாட்டுக்களும் அனுகூலமானது. இவர்கள் நாமம் போற்றப்படுவதாக. நன்றியாக இதைப் பிரசுரிக்கிறேன்.

பனை. ஒருபக்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் இலவச சந்தா நிதி

## ஒரு பெரியாரின் உதார நன்கொடை

பாதுகாவலனை விலைகொடுத்து வாங்கிப்படிக்கமுடியாத நிலைப்பாட்டில் உள்ளவர்களிற் சிலராவது அதை இலவசமாகப்பெறவசதியளிக்கும் நோக்கத்துடன் ஒருநிதியை ஆரம்பிக்கும்படி நமது வாசகநேயர் ஒருவர் விடுத்த வேண்டுகோளைக் கடந்தவாரம் பாதுகாவலனிற் பிரசுரித்திருந்தோம். இதன்பயனாக, பிரசுரம்செய்யப்பட்ட அடுத்தநாளே ஒரு பெரியாரிடமிருந்து நிதிக்கு நன்கொடையாக நூறு(100)ரூபா கிடைக்கப்பெற்றோம். தமது பெயரையும், விலாசத்தையும் மறைவாக வைத்திருக்க விரும்பும் இவர் எழுதுவதாவது:

"தமிழ்ப்பேசும் வேதவைராக்கியமுள்ள கத்தோலிக்க மக்களிற் பலர் இந்தநிதியைத் தாராளமாய் ஆதரிக்க முன்வருவார்களென்று வெகுவாய் விரும்புகிறேன். பாதுகாவலன் எமது பத்திரிகை. எங்களில் ஒவ்வொருவரும் பாதுகாவலனைத் தவறாது வாசிக்க வேண்டிய முயற்சிகளெல்லாம் நாம் எடுக்கவேண்டும். எமது பத்திரிகையை வாசிக்கவிரும்பும் எவராவது பணத்தட்டுப்பாட்டின் நிமித்தம் அப்படிச் செய்யாமலிருப்பது துக்கமான காரியம்."

தபாற்செலவு உட்பட, பாதுகாவலன் வருடசந்தா 9 ரூபாவாதலால் இப்பெரியாரின் நன்கொடையைக் கொண்டு 11 குடும்பங்களுக்குப் பாதுகாவலனை ஒருவருடத்துக்கு இலவசமாக அனுப்பமுடியும். இவரின் முன்மாதிரிகையை அநேகர் பின்பற்றுவார்களென்று எதிர்பார்க்கிறோம். ஆனால் எல்லோராலும் ரூபா 100 அனுப்பமுடியாது. இத்தொகையில் பத்திலொரு பங்கு அல்லது நூறிலொரு பங்குதானும் நன்றியுடன் ஏற்கப்படும். தொகையல்ல, நோக்கமே மேல்.

பாதுகாவலனை இலவசமாகப் பெறவிரும்புவோர் பங்குக்குருவரின் சிபார்சுடன் கீழே குறிக்கப்பட்டிருக்கும் முகவரிக்கு மனுப்பண்ணவும். அவர்களின் நாமம் ஒருபோதும் வெளியிடப்படமாட்டா.

நிதிக்குப் பணம்செலுத்த விரும்புவோரும் அதேமுகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

நிர்வாக ஆசிரியர்,
பாதுகாவலன் அலுவலகம்,
தபாற்பெட்டி இல. 2,
யாழ்ப்பாணம்.

### நிதிக்குப் பணம்அனுப்பியவர்களின் விபரங்கள்:

| | ரூபா | சதம் |
|---|---|---|
| ஓர் உபகாரி | 100 | 00 |
| திரு. வ. லுக்கேஸ்பிள்ளை, கரவெட்டி. | 4 | 00 |
| மொத்தம் | 104 | 00 |

# லூதரன்சபைப் பாதிரியார் கத்தோலிக்க குருவாகின்றார்

ஜேர்மனி தேசத்தில், லூதரன் கிறீஸ்தவசபைப் பாதிரியாராக பல வருடங்கள் கடமையாற்றியவரும், 39வயது நிரம்பியவருமான ஏணெஸ்ற் அடம்பெக் என்னும் அமெரிக்க பாதிரியார் விரைவில் கத்தோலிக்க குருப்பட்டம்பெற இருக்கின்றார்: தற்போது மெயின்ஸ் நகரகுருமடத்தில் குருவானவருக்கு உரிய படிப்புகளைக் கற்றுவருகின்றார். இவருக்கு மனைவியும் இரு பிள்ளைகளும் உண்டு. குடும்பத்தினர் யாவரும் கத்தோலிக்க மறையில் ஏற்கனவே சேர்ந்துவிட்டனர். இவர் திருமணம் செய்தவராயினும், கீழ்த்தேச கிறீஸ்தவசபைக் குருமார் சிலரைப்போல் தமது குடும்பத்துடன் வாழ்ந்துவர விசேஷஅனுமதி பெற்றிருக்கின்றார். சென்றவருடங்களில் இத்தகைய 5பழைய பாதிரிமார் கத்தோலிக்க குருபதவிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர், இன்று உயிருடன் இருக்கும் அவர்களது மனைவிமார் இறக்க நேரிடின் மறுமணம் இவர்கள் முடித்துக்கொள்ள அனுமதி இல்லை.

## கத்தோலிக்க பத்திரிகைகளின்சேவையை பாப்பரசர் பாராட்டினர்

கத்தோலிக்க பத்திரிகைகளை வாசியாத எவரையும் உலகவிஷயங்கள் அறிந்தவர் எனக் கணித்துக்கொள்ள முடியாது. கத்தோலிக்க சமய நிகழ்ச்சிகள் இன்றைய சரித்திரத்தில் முக்கியம்வாய்ந்தவை. ஆகவே, இந்தச் செய்திகளைத் தொடர்பாக அறிந்துகொள்ளாவிடில் உலகசரித்திர அறிவில் வளர்ச்சிபெறமுடியாது. பரந்த அறிவுள்ள கத்தோலிக்கரை ஆக்குவதில், கத்தோலிக்க பத்திரிகைகள் கொண்டுள்ள பங்கு மிகப் பெரிதாகும்.

● ரூஷியதேச மொஸ்கோ நகரிலும், பல்கேரியதேச சோபியாநகரிலும் பெரியவார நடுச்சாமப் பூசைக்கு 'ஒதொடக்ஸ்' சபைக் கிறீஸ்தவர்கள் சென்றிருந்தபோது, அவர்கள்மத்தியில் பொதுவுடைமைக் கட்சியினர் புகுந்து கேலிக்கூத்துகள் செய்து ஆராதனையைக் குழப்பிவைத்தார்கள்.

● இந்திய மத்தியபிரதேச புதிய மேற்றிராணியார் டி சூசா ஆண்டகையின் முடிசூட்டுவிழாவன்று, அப்பிரதேச தேசாதிபதியும், மந்திரிமாரும் சமூகமளித்துப் புதிய மேற்றிராணியாரைப் பாராட்டி, அவரது முன்னேற்ற கருமங்களில் உதவியளிப்பதாக உறுதி கூறினர்.

## கிறிஸ்தவ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றன. பெருந்திரளான சனம் இக்கூட்டங்களுக்குச் செல்கின்றனர். இவ்வியக்கத்தினால் ஒற்றுமை இயக்கம் பலப்பட்டுவருகின்றது என்பதை உணர்ந்த சபை அதிகாரிகள் இதுபோல மறுஇடங்களிலும் நடத்திவர முயற்சிகள் எடுக்கின்றனர்.

## 2-ம் வத்திக்கான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிக அவசியம். இவ்வருடக் கூட்டங்களில் வத்திக்கான் சங்கத்தில் இக்கருமம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

கேள்வி: 4

**மெய்விவாகம் செய்தவர்களுக்குத் "தியாக்கோன்" பட்டம் கொடுப்பதுபற்றி உமது அபிப்பிராயம் யாது?**

பதில்:

இன்றைய உலகநிலையில் அது அவசியமாகவே எனக்குத் தோற்றுகின்றது. ஆனால், உலகில் சகல பாகங்களிலும் "தியாக்கோன்" பதவிக்குரிய வேலைகளைத் தெரிந்தெடுக்கப்பட்ட இல்லறத்தோர் செய்யும் அவசியம் ஏற்படாது. சில இடங்களில் அவசியந்தான். ஆகவே, வத்திக்கான் சங்கம் இதற்கு வழிவகுத்து, தேவையான மேற்றிராசனங்களில் அவர்களை நியமனம்செய்து உபயோகித்துக்கொள்ள மேற்றிராணிமாருக்கு அதிகாரம் கொடுப்பது நன்றெனவே எனக்குத் தோன்றுகின்றது.

கேள்வி: 5

**கன்னிகாஸ்திரிமாரும் காலத்துக்கேற்ற முறைகளைக் கையாள வேண்டும் என்பதுபற்றி நீர் கூறிவந்திருக்கிறீரே — அதைப்பற்றிச் சற்று விளக்கங் கொடுக்க முடியுமா?**

பதில்:

ஆம். தேவனின் போதனைகளைக் காலத்துக்கேற்ற முறைகளை உபயோகித்துப் போதிக்கவேண்டும் என்று எடுத்துக்காட்டிய பொழுது, கன்னிகாஸ்திரிமாரும் தமது சில சில முறைகளைமாற்றி அமைப்பின் நன்மைபயக்கும் எனக் கூறியிருக்கின்றேன். அவர்களது முறைகளிலே மாத்திரமன்றி ஆடையிலேதன்னும் தற்காலத்துக்கு ஏற்றதாக அவர்கள் இருப்பதை நான் விரும்புகிறேன். இன்றைய உலகபெண்மணிகளுக்குஅவர்கள் உற்சாகம் ஊட்ட வேண்டுமாயின் பழையமுறைப் படிநடப்பது உகந்ததல்ல. கன்னிகாஸ்திரிமார் மக்களைத் தேடிச் செல்லும்காலம் வந்துவிட்டது. அவர்கள் தத்தம் மடங்களில் பூட்டிக்கொண்டிருக்க ஒருசிலர் அவர்களைத்தேடி அங்கு சென்றகாலம் போய்விட்டது. கன்னிகாஸ்திரிமாருடைய உதவி ஒரு சிலருக்கு மாத்திரமல்ல, பொதுமக்கள் சகலருக்கும் தேவைப்படுகின்றதல்லவா?

## இலங்கைக் கத்தோ ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாமே எமது வழிகாட்டிகளும் எஜமான்களுமாவோம்.

● இவ்விசாரணைக் குழுவினரின்முன் கத்தோலிக்கருக்கு எதிராகக் கூறப்பட்ட அநேக குற்றச்சாட்டுகள் உள. கத்தோலிக்க சங்கத்திலுள்ள ஓர் இளம் பகுதியினர், அக்குற்றச்சாட்டு ஒவ்வொன்றையும் மறுத்துக் கூறி ஆதாரங்கள் காட்டவேண்டுமென்று வாதாடுகின்றனர். ஆனால், விசாரணைக்குழுவில்சட்ட அனுபவமுள்ளவர் அங்கத்துவம் [illegible] ஆதாரமின்றிக் கூறப்பட்ட எல்லாக் குற்றச்சாட்டுக்களையும் மறுத்துப்பேசுவது அநாவசியமான செயலாகும் என நான் எடுத்துக்காட்டினேன். அதைச் சங்கம் ஏற்றுக்கொண்டதால் இன்று பல விஷயங்களைப் பற்றிப் பொதுவானமுறையில் சாட்சியம் அளிக்கின்றோமல்லாது குற்றச்சாட்டுப் பிதற்றல்கள் பலவற்றில் எமது கவனம் செலுத்தப்படவில்லை.

### பேராசிரியர் கே. பி. முத்தையா அவர்களின் தேகவியோகம்

பன்னூல்களிலும், செய்தித்தாள்களிலும், பலர்ஒன்றுகூடும் சபைகளிலும் "விடிவெள்ளி" என்னும் சிறப்புப்பெயர்கொண்டு பேராக அறியப்பெற்றுவந்த பேராசிரியர் கே. பி. முத்தையா அவர்கள் சென்ற 26-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 2-30 மணிக்குக் காத்திராப்பிரகாரம் மரணத்திரையிலே மறைந்தாரெனக் காட்டாக்கினிபோல்பரந்த அமங்கல செய்தியை அறியவந்த அவரின் இனசனர்களும், ஆயிரர் ஆயிரரான அவர் அன்பர்களும், மற்றும் ஆசிரியர்கள், அபிமானிகளும் "அந்தோ, நமது விடிவெள்ளி மறைந்ததே" யென்று உளம் வருந்தினர். பெருமூச்செறிந்தனர். சிந்தாகுல மெய்தினர்.

ஆசிரியர் முத்தையா அவர்களை எமதுநாட்டிலே அறியாதார் இல்லை எனலாம். ஆசிரியர்களாலே ஓர்உத்தம ஆசிரியரென்றும், அறிஞர்களாலே ஒருநல்லறிஞரென்றும், அன்பர்களாலே ஓர்உண்மை நண்பரென்றும், சமூகத் தொண்டர்களாலே ஆக்கமூக்கம் நிறைந்த ஒருசமூகத் தொண்டர், தேசத்தொண்டரென்றும், பேச்சாளர்களாலே ஓர்உயர்ந்த பேச்சாளரென்றும், எழுத்தாளர்களாலே ஒருபோந்த எழுத்தாளரென்றும், கவிஞர் சாலைஇளந்திரையன் அவர்கள்போன்ற நூலாசிரியர்களாலே ஒருசிறந்த நூலாசிரியரென்றும், பல்வேறு கிறிஸ்தவ சபையினராலும், பிறராலும், ஒருகிறிஸ்தவ பக்திமானென்றும் பாராட்டப்பெற்றுவந்த இப்பெரியாரின் சிறந்த தமிழ்ப் பண்பாடு, தமிழ்ப்பணி, தமிழ்ப்புலமை ஆகியவைகளை இனிமேலும் பாராட்டுவதற்கில்லை.

ஓர்உத்தம ஆசிரியர்க்குரிய இலட்சணமெல்லாம் ஒருங்கேயமைந்த ஓர் ஆசிரியராய், சமூகத்தொண்டுகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டுச் "சமூகத் தொண்டன்" முதலாம் சஞ்சிகைகளின் ஆசிரியராய், சமய,சாகிய இயக்கங்களிலேமுன்னணியில்நின்று வீரத்துவமாக உழைத்த ஒருவீராபிமானியாய், தமது பேச்சுவன்மை, எழுத்துவன்மையாலே செவிக்கும், மனதுக்கும் தேன்போலும் சுவையமுதம் பொழிந்துவந்த ஒருவெகுமானியாய், கிறிஸ்தவ ஆச்சிரமத்தில் இளைப்பாற்றிகண்ட ஆத்மீக தியானியாய் புன்னகைதவழ இன்சொல்பகர்ந்து எவரையும்இனிதே உவந்துவரவேற்கும் பெருமகனாய் எம்மத்தியிலே பல்லாண்டுகாலமாய்ப் பிரபைகாலித்திருந்த "விடிவெள்ளி அவர்களின் திடீர்மறைவை நினைக்குந்தொறும் நினைக்குந்தொறும், அம்மம்ம! கண் கலங்குகின்றதே! நெஞ்சம் புண்ணாய் வருந்துகின்றதே! இவர் ஆன்மா சாந்தியடைவதாக!

● போலாந்துதேச கருதினால் உவைசின்ஸ்கி ஆண்டகை மீளவும் உரோமாபுரிக்கு சங்ககரும ஆலோசனைகளுக்காக அழைக்கப்பட்டுப் போனபோது சென்றவாரம் அவுஸ்திரிய கருதினால் கொவெனக் என்பவருடன் சிலநாட்கள் தங்கிநின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## தேவநற்கருணைத் திருநாள்

நமது ஆசனக்கோவிலிலே தேவநற்கருணைத்திருநாள் நாளை31-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை வழமைபோலக் கொண்டாடப்படும். காலை7-30மணிக்குப் பெரியபாடற்பூசை நிறைவேறும். சாயந்தரம் 4மணிக்குத் திருமணித்தியாலம்நடந்து அதன்மேல் திவ்விய சற்பிரசாத கதிர்ப்பாத்திரத்தை நம் மேற்றிராணியாண்டவர் அவர்கள் தமதுகரங்களில்ஏந்தத் திருப்பவனி ஆரம்பமாகும். பவனியின் போது சந்தியோகுமையோர்கோவில் முன்றிலிலும், சம்பத்திரிசியார் கல்லூரிப் பெரியவாயில்முன்பாகவும் அமைக்கப்பட்டிருக்கும் அழகியபீடங்களிலே திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ் செய்து ஆசீர்வாதம் வழங்கப்படும்.

## கொழும்புத்துறைத் தாபனத் திருநாள்

கொழும்புத்துறைத் தாபனத்தின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பர் திருநாள் சென்ற24-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைவழமைபோலச் சிறப்பாய்க் கொண்டாடப படலாயிற்று. காலை 7மணிக்குச் சங்.கன்னியாஸ்திரிகளும், ஆசிரியர்கள், ஆசிரியைகளும், சாதனைப் பாடசாலை மாணவர்களும், மற்றும் பக்தர்களுமாகத் திரளானோர் ஆலயத்தில்தேங்கியிருக்கச் சென். என்றீஸ் கல்லூரிஅதிபர் வண. எவ். ஜே. ஸ்ரனிஸ்லாஸ் சுவாமிகளாலே திருநாட்பூசை நிறைவேறியது. பின்னர்9மணிக்குத் தாபன பழையமாணவர்சங்க வருடாந்தகூட்டம் நிகழலாயிற்று. சாயந்தரம் செபமாலை, பிரார்த்தனை, பிரசங்கம் ஆகியவற்றைத் தொடர்ந்து திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் பக்திச் சிறப்பாகநடந்து ஆலயத்தைஅடைந்ததும் வழமைபோல எமதுமேற்றிராசனம் திருச்சபையின் பாதுகாவலரான திருவளனுருக்கு நேர்ந்து ஒப்புக்கொடுக்கப்பெற்றுத் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று.

## தேசிய குருமடத்தின் புதியஅதிபர்

கண்டியிலே அம்பிற்றியாவிலுள்ள இலங்கைத் தேசியகுருமடத்தின் கல்வித்துறைப் புதியஆண்டு வருகிற ஆனிமாதம் ஆரம்பமாவதோடு அதற்குப் புதியஅதிபர்ஒருவர் நியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்றார். குருத்துவத்திற்கு மாணவர்களைப் பயிற்றுதற்கென இலங்கையின் ஒரேயொரு பிரதமகுருமடமாய் இருந்துவருகின்ற இந்தக்குருமடத்தின் புதியஅதிபராக வண. டால்ஸ்ரன் போவ்ஸ் O. M. I. சுவாமிகளும், உபஅதிபராக வண. ஜிம்குக் O. M. I. சுவாமிகளும் நியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்றனர். இந்தக் குருமடம் 1955-ம்ஆண்டு ஆரம்பமானதுமுதல் ஒன்பதுஆண்டுகளாக இதன்அதிபராய் விளங்கியிருந்து மகத்தானசேவை ஆற்றிவந்துள்ள வண. எவ். சக்கெற்சுவாமிகள் தம்முடைய பதிலாளியான புதியஅதிபர் வருகிற ஆனிமாதம் 10-ந்திகதியன்று அதிகாரபூர்வமாகப் பதவியிலே அமர்த்தப்படும்போது அவரிடம் பொறுப்பைக் கையளித்துத் தம்முடையபதவியிலிருந்து இளைப்பாறவிருக்கின்றார்.

## பழையமாணவ குருப்பிரசாதிகள்

கொழும்பிலே கொட்டாஞ்சேனையிலுள்ள சென்பெனெடிற்கல்லூரிப் பழையமாணவர்களாய்ச் சமீபத்திலே குருப்பட்டம் பெற்றுக்கொண்ட வண. லூசியன் பெர்னாண்டோ, வண. ரெறென்ஸ் பெர்னாண்டோ, வண. நாலின் சுவாறிஸ்எனும் புதியகுருப்பிரசாதிகள்மூவருக்கும் அக்கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் அன்று பரிமளிப்பான ஒருவரவேற்பு உபசரணைவிழாநடத்தினார்கள். இம்மூவரும் அக்கல்லூரியிலேயே தங்கள் பாடசாலைக்கல்வி முழுவதையும்பெற்றுக் குருமடத்தில் சேர்ந்துகொண்டனர். அதனால் தங்கள்மத்தியிலே மூச்சுடர்கள்போன்று அவர்கள்காட்சியளித்தபோது அதிலே கல்விபயிற்றும் கிறிஸ்தியன்பிறதர்மாரும், ஆசிரியர்களும், மற்றும்கல்லூரிமாணவர்களும் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்.

## தமிழில் நிரப்பிக் கொடுங்கள்

அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்களைப் பெறுவதற்காக நிரப்பிக் கொடுக்க வேண்டிய குடியிருப்பாளர்களின் அட்டவணைப் பத்திரங்களைத் தமிழில் நிரப்பிக்கொடுக்குமாறு தமிழ்ப்பேசும் மக்கள்அனைவரையும் "எல்லாம் தமிழ் இயக்க"த்தினர் கேட்டுள்ளார்கள். இன்னும் அரசாங்கத்துக்கு எழுதும் கடிதங்கள், அனுப்பும் காசோலைகள், நிரப்பிஅனுப்பும் பத்திரங்கள் ஆகிய எல்லாவற்றையும் தமிழ்மொழியிலேயே அனுப்புமாறு எல்லாம் தமிழ் இயக்கம் கேட்டிருக்கிறது.

## கூப்பன் புடவைகள்

கூட்டுறவு மொத்தவியாபார ஸ்தாபனத்திலிருந்து கூப்பன்கள்மூலம் துணிகள்வாங்குவோர் வருகிறஆனி மாதம்30-ந்திகதிக்குமுன் அவைகளை வாங்கிவிடவேண்டும். ஆடிமாதம்1-ந்திகதியன்று புதியகூப்பன்கள் பாவனைக்கு வருமாகையால் அதற்குப்பின் தற்போதையகூப்பன்கள் செல்லுபடியாகமாட்டா. தங்கள்கூப்பன்களை இன்னும்பாவியாது பின்போடுகிறவர்களுக்கு இது ஓர்எச்சரிக்கையாகும். சேலைகளிலும்பார்க்க வெள்ளைத்துணிகளுக்கே அதிகதேவை ஏற்பட்டுள்ளது. இந்தத்துணிகளைக் கடைகளிலே வாங்குமிடத்து யார்ஒன்றுக்கு மூன்றுரூபா கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆனால், கூட்டுறவுக்கடைகளில் இத்துணிகள் யார்ஒன்று 1ரூபா 90 சதத்திற்கே விற்கப்படுகின்றன.

## பிரதம புத்தகுருவின் எச்சரிக்கை

"நாட்டைத் தற்பொழுது எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குக் கூட்டரசாங்கம் அமைப்பது பரிகாரமல்ல; தற்போதைய அரசாங்கத்தினால் இப்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முடியாவிடில், அது கூட்டரசாங்கம்ஒன்றை அமைக்க முயல்வதற்குப் பதிலாகப் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெறவேண்டும்; தற்போதைய அரசியல் நிலைமையின் விளைவாகத் திபேத்து மக்களுக்கு ஏற்பட்ட அதேகதிதான் இலங்கைமக்களுக்கும் ஏற்படவிருக்கிறது; நாட்டின் இப்போதையநிலை மிகஆபத்தானதாகும்; நாட்டுக்குப் பேரழிவு ஏற்படுமோவென்றும் சிலசமயங்களில் அச்சம்ஏற்படுகிறது" என்று மல்வத்தைப் பௌத்தசமய பீடத்தைச்சேர்ந்தவரும், இலங்கையிலுள்ள பிக்குகளின் மிகப்பெரியபிரிவின் தலைவருமான கனம். அமுனுகம இராஜகுரு ஸ்ரீவிபாஸிதேரோ அபிப்பிராயம் தெரிவித்து எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

## எம். பி. எச்சரிக்கின்றார்

"இலங்கையில் கூட்டரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமானால் பிரதமர் ஆறுமாதகாலத்துள் தனதுபதவியிலிருந்து அகற்றப்படுவார்; இடதுசாரி ஐக்கியமுன்னணியுடன் கூட்டுச்சேருவதுஎன்பது நம்முடையசமயத்தின் இறுதிநிலையையும் [illegible] கம்யூனிஸ[illegible] வங்[illegible]ளநாடுகளிலே புத்தசேத்திரங்கள் விநோதபொருட்காட்சிச் சாலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன" என்று மிரீகமத்தில் சென்றவெள்ளிக்கிழமை நடைபெற்ற ஒருகூட்டத்தில் மிரீகம எம். பி. விஜயபாகு விஜெசிங்க கூறியிருக்கின்றார்.

## படகுவாங்கக் கடன்வசதி

இலங்கைக் கரைகளிலிருந்து பத்து முதல் இருபதுமைல்தூரத்துக்கிடையிலுள்ள ஆழ்கடற்பகுதிகளில்பிடிக்க ஏராளமானமீன்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளமையால் அப்பகுதிகளுக்குச்சென்று மீன்களைப் பிடிக்குமாறு கடற்தொழிலாளர்கள் புதியமாதிரியான பெரியஇயந்திரப் படகுகளை வாங்கிக்கொள்வதற்கான கடன்வசதிகளை மீன்பிடிபகுதி அளிக்கவிருக்கிறது. இந்தக்கடன்வசதிகள் மீன்பிடிக்கிறவர்களுக்கும், மீன்பிடி தொழிலில் பயிற்சிபெறுகிறவர்களுக்கும், மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அளிக்கப்படும். இந்தப் படகுகள் ஒவ்வொன்றும் நாற்பதினாயிரம்ரூபா பெறுமதியுடையனவாம்.

## அரசாங்கப் படிகள் இல்லை

மாநகரசபைகளிலும், நகரசபைகளிலும் இவ்வருடம் தைமாதமுதல் வேலைக்கு அமர்த்தப்படுகின்ற புதிய ஊழியர்களுக்கு இதுவரை தான் கொடுத்துவந்த விசேடவாழ்க்கைப்படியையும், பஞ்சப்படியையும் இந்தஆண்டிலிருந்து நிறுத்திவிட அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது. இந்தமுடிவைத் தலதாபன கமிஷனர் முன்சொன்ன இருபிரிவான சபைகளுக்கும் ஒருசுற்றறிக்கைமூலம் தெரிவித்திருக்கின்றார். அதனால் அச்சபைகளே அவர்களின் இருவித படிச்செலவுகளையும் இனிமேல் கொடுக்க வேண்டி வரும்போலிருக்கிறது.

## கிராமச்சங்க லிகிதர்கள்

நாட்டின் பலபாகங்களிலும் நானூற்றுக்குமேலுள்ள கிராமச்சங்கங்களிலே பணியாற்றும் ஆயிரவருக்கு மேற்பட்ட லிகிதர்களுக்கெல்லாம் ஒரு சுபசெய்தி கிடைத்திருக்கிறது. அதாவது வருங்காலத்திலே இவர்கள் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை ஆகியவற்றிற்கு இடமாற்றம் செய்யப்படக் கூடியவர்களாய் இருப்பதே. இவர்களைப்போலவே மாநகரசபை, நகரசபை, பட்டினசபைகளின் லிகிதர்களும் கிராமச்சங்கங்களுக்கு இடமாற்றஞ்செய்யப்படலாம். முன்சொன்ன மூவிதசபைகளுக்கும், கிராமச்சங்கங்களுக்கும் லிகிதர்களைத் தெரிவுசெய்வதற்கான முதலாவது பொதுப்பரீட்சை அடுத்த நான்கு மாதங்களுக்கிடையிலே நடைபெறுமென்றும், முதல் இடமாற்றங்கள் அடுத்தசிலவாரங்களிலே நடக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

---

● போலாந்துதேசத்துக்குச் சேர்ந்த ஒருதாயும் அவள் மகளும் முத்திப்பேறுபெற்ற பட்டத்துக்கு உரித்தானவர்களெனச் சிபாரிசுசெய்யப் பரிசுத்த சடங்குகளின் பொறுப்பாளர்சபை தீர்மானித்திருக்கிறது.


விவசாய ரசாயன மருந்து வகைகளாலும்

கிருமி நாசினி மருந்துவகைகளாலும்

உங்கள் பயிர்களை அழிக்கும்

பூச்சி புழுக்கள்

மற்றும்

பயிர்களைப் பாதிக்கும்

புற்களையும்

அறவே ஒழித்து

உங்கள் கமத்தொழிலில்



அதிக லாபத்தைப் பெறுங்கள்!

இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய சிறந்த

தெளிகருவிகள் (SPRAYERS)

எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்

விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்

ஓட்டோஸ் லிமிட்டெட்,

தந்தி: "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன் : 496.

கிளை

தந்தி: "AUTOS" வவுனியா. டெலிபோன் : 577.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்திலே 1964-ம் ஆண்டு வைகாசிமாதம் 30-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org